| **திருக்குறள் ஒப்புவித்தல் / Thirukkural Recital without Meaning** | |
|---|---|
| **வயது/Ages: 5 - 6** | **நிலை/Level : 3** |
| **விதிமுறைகள்:** | 1. போட்டிகள் அரங்கினுள் நடைபெறுவதால், போட்டியாளர்கள் நேரில் பங்கேற்க வேண்டும்<br><br>2. போட்டியாளர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள முப்பத்து ஐந்து குறள்களிலிருந்து ஒப்பிக்க வேண்டும்<br><br>3. இரண்டு நிமிடம் முப்பது நொடிக்குள் அதிக குறள்களை ஒப்பிப்பவர் வெற்றி பெற்றவர்<br><br>4. **குறளின் பொருள் சொல்லத் தேவை இல்லை.**<br><br>5. குறளின் ஒவ்வொரு சொல்லையும் தெளிவாக உச்சரிக்க வேண்டும்<br><br>6. வெற்றியாளர் சொல் உச்சரிப்பு, குறள் உள்ளடக்கம், தங்கு தடையின்றி சொல்லுதல், ஒப்புவிக்கும் விதம் மற்றும் நேர உபயோகம் ஆகியவை கொண்டு தேர்ந்தெடுக்கப்படுவர்<br><br>7. நடுவர்களின் முடிவே இறுதியானது |

Copyright © 2026 All Rights Reserved

| **திருக்குறள் ஒப்புவித்தல் / Thirukkural Recital without Meaning** | |
|---|---|
| **வயது/Ages: 5 - 6** | **நிலை/Level : 3** |
| **Instructions:** | 1. The competition will be held in a venue where contestants should participate in person<br>2. Participant must recite Thirukkurals without meaning from the pre-selected list of 35 (Scroll below)<br>3. The winner recites the most in the given 2 minutes and 30 seconds<br>4. **No need to say the meaning**<br>5. Each word in the kural should be pronounced clearly<br>6. The winner will be evaluated based on 5 criteria - Pronunciation, Content, Flow, Presentation, and Duration<br>7. Jurors' decisions are final |

Copyright © 2026 All Rights Reserved

## திருக்குறள் பட்டியல்/Thirukkural List

1) குறள் 101 *செய்ந்நன்றி அறிதல்*

**செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்**

**வானகமும் ஆற்ற லரிது.**

2) குறள் 127 *அடக்கமுடைமை*

**யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்**

**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.**

3) குறள் 199 *பயனில சொல்லாமை*

**பொருள்தீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருள்தீர்ந்த**

**மாசறு காட்சி யவர்.**

4) குறள் 201 *தீவினையச்சம்*

**தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்**

**தீவினை என்னுஞ் செருக்கு.**

5) குறள் 238 *புகழ்*

**வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்**

**எச்சம் பெறா விடின்.**

Copyright © 2026 All Rights Reserved

6) குறள் 249 *அருளுடைமை*

**தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்**

**அருளாதான் செய்யும் அறம்.**

7) குறள் 258 *புலான்மறுத்தல்*

**செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்**

**உயிரின் தலைப்பிரிந்த ஊன்.**

8) குறள் 291 *வாய்மை*

**வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**

**தீமை இலாத சொலல்.**

9) குறள் 313 *இன்னாசெய்யாமை*

**செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்**

**உய்யா விழுமம் தரும்.**

10) குறள் 321 *கொல்லாமை*

**அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்**

**பிறவினை எல்லாம் தரும்.**

11) குறள் 359 *மெய்யுணர்தல்*

**சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்**

**சார்தரா சார்தரு நோய்.**

Copyright © 2026 All Rights Reserved

12) குறள் 361 *அவாவறுத்தல்*

**அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்**

**தவாஅப் பிறப்பீனும் வித்து.**

13) குறள் 370 *அவாவறுத்தல்*

**ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே**

**பேரா இயற்கை தரும்.**

14) குறள் 392 *கல்வி*

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**

**கண்ணென்ப வாழும் உயிர்க்கு.**

15) குறள் 466 *தெரிந்து செயல்வகை*

**செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க**

**செய்யாமை யானும் கெடும்.**

16) குறள் 491 *இடன் அறிதல்*

**தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்**

**இடங்கண்ட பின்அல் லது.**

17) குறள் 512 *தெரிந்து வினையாடல்*

**வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை**

**ஆராய்வான் செய்க வினை.**

Copyright © 2026 All Rights Reserved

18) குறள் 561 *வெருவந்தசெய்யாமை*

**தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்**

**ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து.**

19) குறள் 586 *ஒற்றாடல்*

**துறந்தார் படிவத்த ராகி இறந்தாராய்ந்து**

**என்செயினும் சோர்விலது ஒற்று.**

20) குறள் 659 *வினைத்தூய்மை*

**அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்**

**பிற்பயக்கும் நற்பா லவை.**

21) குறள் 667 *பொருள்செயல்வகை*

**உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு**

**அச்சாணி அன்னார் உடைத்து.**

22) குறள் 700 *மன்னரைச் சேர்ந்து ஒழுகல்*

**பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும்**

**கெழுதகைமை கேடு தரும்.**

23) குறள் 718 *அவை அறிதல்*

**உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்**

**பாத்தியுள் நீர்சொரிந் தற்று.**

24) குறள் 735 *நாடு*

**பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்**

**கொல்குறும்பும் இல்லது நாடு.**

25) குறள் 765 *படைமாட்சி*

**கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்**

**ஆற்ற லதுவே படை.**

26) குறள் 821 *கூடா நட்பு*

**சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை**

**நேரா நிரந்தவர் நட்பு.**

27) குறள் 859 *இகல்*

**இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை**

**மிகல்காணும் கேடு தரற்கு.**

28) குறள் 866 *பகை மாட்சி*

**காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்**

**பேணாமை பேணப் படும்.**

29) குறள் 893 *பெரியாரைப் பிழையாமை*

**கெடல்வேண்டின் கேளாது செய்க அடல்வேண்டின்**

**ஆற்று பவர்கண் இழுக்கு.**

Copyright © 2026 All Rights Reserved

30) குறள் 894 *குறிப்பறிதல்*

**கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு**

**ஆற்றாதார் இன்னா செயல்.**

31) குறள் 918 *வரைவின் மகளிர்*

**ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கென்ப**

**மாய மகளிர் முயக்கு.**

32) குறள் 955 *குடிமை*

**வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி**

**பண்பில் தலைப்பிரிதல் இன்று.**

33) குறள் 985 *சான்றாண்மை*

**ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்**

**மாற்றாரை மாற்றும் படை.**

34) குறள் 1016 *நாண் உடைமை*

**நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்**

**பேணலர் மேலா யவர்.**

35) குறள் 1068 *இரவச்சம்*

**இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்**

**பார்தாக்கப் பக்கு விடும்.**

Copyright © 2026 All Rights Reserved 